Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only

# புனித அன்னை தெரசா



**செப்டம்பர்**
**05**

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**
**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

**Diocese of Marthandam**
**மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்**

**செப்டம்பர்**
**08**

## தூய மரியாவின் பிறப்புத் திருநாள்



மலர் 19 | செப்டம்பர் 2022 | இதழ் 9

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 03.09.2022 | Saturday | 6.30 pm | Holy Mass | Churulode |
| 04.09.2022 | Sunday | 4.00 pm | Holy Mass | Karivattam |
| 05.09.2022 | Monday | 12.00 pm | Teacher's Day Message | Nanjil Catholic College |
| 06.09.2022 | Tuesday | 5.00 pm | Holy Mass | Palayam - Basilica |
| 07.09.2022 | Wednesday | 11.00 am<br>6.00 pm | Community College Day<br>Holy Mass | Mariagiri<br>Navalkadu |
| 08.09.2022 | Thursday | 8.30 am | Holy Mass<br>Baptism | Nalanchira<br>Pattom |
| 09.09.2022 | Friday | | Marriage | Thiruppur |
| 10.09.2022 | Saturday | 6.00 pm | Holy Mass | Mulagumoodu |
| 11.09.2022 | Sunday | 7.00 am<br>5.00 pm | Holy Mass<br>Holy Mass | Vettukuzhy<br>Karamana |
| 12.09.2022 | Monday | 10.00 am<br>3.00 pm | Marriage<br>Marriage | Vimalapuram<br>Marthandam |
| 17.09.2022 | Saturday | 10.00 am<br>3.00 pm<br>3.00 pm | Legion of Mary –<br>Seminar<br>Cathedral Construction<br>Finance Council Meeting | Pastoral Centre |
| 18.09.2022 | Sunday | | Holy Mass | Muthalar |
| 20.09.2022 | Tuesday | | Holy Episcopal Synod | Thiruvalla |
| 21.09.2022 | Wednesday | | Reunion Day | Thiruvalla |
| 24.09.2022 | Saturday | 3.00pm | Minority Commission Meeting | Nagercoil |
| 25.09.2022 | Sunday | | Church Blessing | Annai Nagar - Pallukuzhy |
| 30.09.2022 | Friday | | Homily | St. Elias Church, Thuckalay |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 செப்டம்பர் 2022 இதழ். 9

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM


*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*




# இளம் குருமடச் செய்திகள்

**புதுகுருக்கள் தினம்**

அனைத்து குருக்கள் தினமாகிய ஆகஸ்ட் 4-ம் தேதி, புது குருக்கள் தினமாக இளங்குருமடத்தில் கொண்டாடப்பட்டது. நமது மறைமாவட்டத்தின் புதுகுருக்களான அருட்தந்தை சுனீஷ் குமார், அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்களும் இளங் குருமடத்திற்கு வருகை தந்து திருப்பலியாற்றி இறையருள் வழங்கினார்கள். திருப்பலிக்குப் பின்னர் வாழ்த்துக் கூட்டம் நடத்தப்பட்டு, புது குருக்கள் கவுரவிக்கப் பட்டார்கள்.





**இறையன்னையின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினம்**

இறையன்னையின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினமாகிய ஆகஸ்ட் 15-ம் தேதி, அதிபர் தந்தை அவர்களால் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர், துணை அதிபர் தந்தை அவர்கள் குருமட வளாகத்தில் நாட்டப்பட்டிருந்த கொடி மரத்தில் தேசிய கொடியேற்றி சுதந்திர தின விழாவைச் சிறப்பித்தார்.

# நற்செய்தி சங்கம்

இம்மாத நற்செய்தி சங்க வகுப்பானது, 06.08.2022 அன்று தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடப்பெற்றது. இதில் நற்செய்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## MCYM
### Youth Apostolate

## இளையோர் இயக்க கூடுகை 2022

இளையோர்களுக்கான கருத்தரங்கானது 21.08.2022 அன்று மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து, 'நல்ல தூதுவர்' என்ற பெயரில், 'மார் இவானியோஸ் பார்வையில் இளையோர்களும் இன்றைய இளையோர்களும்' என்ற தலைப்பில் அருட்தந்தை. யூஜின் அவர்கள் வழிநடத்தினார்கள். அதன் பின் மறைமாவட்டத்தில் இயங்கும் IAS அகாடமி குறித்து இளையோர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில், மறைமாவட்ட MCYM இயக்குநர், இணை இயக்குநர், மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மறைவட்ட தலைவர்கள் மற்றும் அலகு தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## செயற்குழு கூட்டம்

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்க செயற்குழு கூட்டமானது 09.08.2022 அன்று MCYM அலுவலகத்தில் வைத்து இயக்குனர் தந்தை அவர்களின் தலைமையில், இணை இயக்குனர் தந்தை மற்றும் அருட்சகோதரி ஊக்குனர் அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைப்பெற்றது, இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். செயல் திட்டங்கள் குறித்தும், ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி 'நல்ல தூதுவர்' என்ற தலைப்பில் இளையோர் இயக்க கூடுகை மற்றும் கருத்தரங்கின் ஏற்பாடுகள் குறித்தும், செப்டம்பர் 4-ம் தேதி MJKM பள்ளிக்கூடம்; மார்த்தாண்டத்தில் வைத்து மறைமாவட்ட அளவிலான எழுத்து போட்டிகள் மற்றும் வினாடி வினா போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து, மறைமாவட்ட அளவிலான இளையோர் இயக்க தினம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி 'இணைந்து பயணிக்கும் இளைஞராக' என்ற தலைப்பில் கொண்டாடலாம் எனவும், 'மண்வாசனை பாகம் 2' என்ற இளையோர்களுக்கான காய்கறி தோட்டம் அமைக்கும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.





## MCA
### Diocese of Marthandam

### MCA கூடுகை



MCA கூட்டமானது, 31.07.2022 அன்று அருட்தந்தை ராபின்சன் அவர்களின் தலைமையில் குழித்துறை MCA அலுவலகத்தில் வைத்து நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் MCA சார்பாக குருக்கள் தினத்தை; ஆகஸ்ட் 7-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளில் சிறப்பிக்க வேண்டுமென்றும், அன்று இரவு 7 மணிக்கு குருக்களை ஆதரித்து நடைபெறுகின்ற Google meet-இல் அனைவரும் கலந்துக்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.





### திருமண ஆயத்தப்பயிற்சி

**செப்டம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **16, 17** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## மிட்ஸ் அறிவு திறன் தேர்வு – வழிகாட்டுதல் கூட்டம்



மிட்ஸ் தளிர்கள் உலக திட்டத்தின் வழியாக மாணவர்களின் அறிவு திறனை மேம்படுத்தி போட்டி தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கான முயற்சியாக மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பாதிப்பு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த தேர்வானது இந்த ஆண்டு முதல் நடத்தப்பட உள்ளது. இத்தேர்வுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் வகையில் 31.08.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழிகாட்டுதல் கூட்டமானது மதியம் 2 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தினை அன்னை ஆதா பயிற்சி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் றாபின்சன் அவர்கள் நடத்தினார்கள். இக்கூட்டத்தில் மாணவர்களுக்கு இத்தேர்வின் நோக்கம், முக்கியத்துவம் குறித்து விளக்க படம் வாயிலாக விளக்கமளித்தார்கள் இக்கூட்டத்தில் மொத்தம் 170 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## உதவி திட்டங்கள்





16.08.2022 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 5 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5000/- வீதம் மொத்தம் ரூபாய் 25,000/- வழங்கப்பட்டது.

16.08.2022 அன்று மிட்ஸ் உறுப்பினர் நல திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் இருந்து இறந்து போன 4 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு ரூபாய் 10,000/- வீதம் மொத்தம் ரூபாய் 40,000/- இறப்பு நிதியாக வழங்கப்பட்டது.

17.08.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணி மண்டலத்திற்கு உட்பட்ட 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

10.08.2022 முதல் 24.09.2022 வரை மிட்ஸ் பணி மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சுய உதவி குழு பொருளர்களுக்கு மிட்ஸ் அமைப்பாளர்களால் கணக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

13.08.2022 மற்றும் 18.08.2022 ஆகிய தேதிகளில் ஆற்றூர் மற்றும் நடைக்காவு கிளஸ்டர்களில் உள்ள மிட்ஸ் மற்றும் கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு மருத்துவர் சிட்னி ஹோப்பர் அவர்களால் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

19.08.2022 அன்று தளிர்கள் உலக மாணவர்களுக்கான சிறப்பு வகுப்பானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து காலை 9.30 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற்றது. இந்த சிறப்பு வகுப்புகளில் மொத்தம் 146 மாணவ மாணவிகளும் 106 பெற்றோர்களும் கலந்து கொணடனர்.





19.08.2022 அன்று CTTWC திட்டத்தில் பயன் பெற்று வரும் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெற்றோர்ககளின் அனுபவ பகிர்வானது CRS மற்றும் TASOSS பணியாளர்களால் காணொளி காட்சியாக படமாக்கப் பட்டது.

## HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 08.07.2022 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்துகொணடனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். அருட்தந்தை ராபர்ட் அவர்கள் ஒவ்வொருவரின் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். பின்னர் HOM வழியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் அனைத்து ஸோண்களிலும் மருத்துவ முகாம்கள் மற்றும் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணையம் சார்பாக ஆகஸ்ட் 2 மற்றும் 3 ஆகிய தியதிகளில் பூண்டியில் வைத்து நடைபெற்ற நமது இதயம் காப்போம் என்ற ஆய்வுப் பொருளின் கீழ் நடைபெற்ற பயிற்சியாளர்களின் பயிற்சியரங்கில் மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட், MMM செயலர் திரு. ஜாண் மற்றும் HOM பணியாளர் லிஸ்பின் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியரங்கு தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக 55 நோயுற்ற முதியோர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் தாய் சேய் நலத்திட்டம் சார்பாக 30 கர்ப்பிணி பெண்களுக்கு சத்து மாவு வழங்கப்பட்டது.



# மேரி மக்கள் துறவற சபை

### மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணக பயணத்தின் 39-வது நினைவு ஆண்டு மற்றும் 40-வது (றூபி ஜூபிலி) துவக்க விழா

மார்த்தாண்டம் பகுதிகளில் இறைசுடர் ஏற்றி, வாழ்விழந்து வழிமாறி நோயினால் பாதிக்கப்பட்டு வாடிய மக்களுக்கு உயிர் நாடியாக கடந்து வந்து விசுவாச விதையை இம்மண்ணில் விதைத்த மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணக பயணத்தின் 39-வது ஆண்டு நினைவுத் திருப்பலி மற்றும் சிறப்பு ஜெபமும் மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைப்பெற்றது. 22.08.2022 அன்று மாலையில் மெழுகுவர்த்தி ஏந்தி பவனியாக அருட்சகோதரிகள் மோண்சிஞ்ஞோர் அவர்களின் கல்லறையில் ஒன்றுகூடி சிறப்பு ஜெபத்திலும் தூபமன்றாட்டிலும் கலந்துக்கொண்டார்கள். 23.08.2022 அன்று காலையில் முன்னாள் ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை தலைமையில், கூரிய ஆயர் மேதகு ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகை மற்றும் மறைமாவட்ட குருக்கள் இணைந்து நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலியின் இடையில் மேதகு ஆயர் ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகை அவர்கள் நினைவுரை வழங்கினார்கள். தொடர்ந்து நினைவு கூட்டம் நடைபெற்றது. 40-வது றூபி ஜூபிலியை முன்னிட்டு 'ஜூபிலி திரி' எல்லா மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டது. அருட்தந்தை அவர்களின் 50 ஆண்டுகால பணிவாழ்வைப் பற்றி தங்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் வழியாக முன்னாள் ஆயர் மற்றும் மதர் லிடியா, அருட்தந்தை மரிய அற்புதம், திரு. வின்செென்ட் (ஆசிரியர்) ஆகியோர் பகிர்ந்து கொண்டனர். பனச்சமூடு திருமதி புஷ்பராணி அவர்கள் மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் அடங்கிய புத்தகத்தை குருகுல முதல்வர் ஜோஸ் பிறைட் அவர்கள் வெளியிட்டார்கள். தொடர்ந்து கல்வி உதவி தொகையும் வழங்கப்பட்டது. இறுதியில் கல்லறையில் தூபமன்றாட்டும் நடத்தப்பட்டது.







## SISTERS OF CHARITY OF ST. JEANNE ANTIDE THOURET

சுதந்திர தின விழாவை முன்னிட்டு Unity Home -ல் முதியவர்கள் மற்றும் மாணவிகள் இணைந்து அருட்சகோதரி சோபியா அவர்களின் தலைமையில் சுதந்திர தினவிழா கொண்டாட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.





## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை சஜீவ்
செப்டம்பர் 04



அருட்தந்தை ராபர்ட்
செப்டம்பர் 17



அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத்
செப்டம்பர் 29



அருட்தந்தை ஜெறோம்
செப்டம்பர் 30



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்



மார்த்தாண்ட மறைவட்ட தின விழா கொண்டாட்டம் 7/8/ 2022 அன்று விமலபுரம், புனித லூர்து அன்னை ஆலயத்தில் துவக்க ஜெபத்துடன் தொடங்கி பவனியாக கோணம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் வந்தடைந்தது. அதைத்தொடர்ந்து *இணைந்து பயணிக்கும் திருஅவை* என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டம் மோண் ஜோஸ் பிரைட் அவர்கள் தலைமையில், அருள் தந்தையர்கள், அருள் சகோதரிகள் மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ரிச்சர்ட் (Correspondent, TRINITY CBSE School) அவர்கள் கலந்துகொண்டார்கள்.



இந்நிகழ்ச்சியில் 12 பங்குகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். பின்பு பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றிப்பெற்று 75%க்கு மேல் மதிப்பெண் பெற்றவர் களுக்கும்; மறைக்கல்வியில் 60%க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. அதன் பின் மறைக்கல்வி மன்றம் நடத்திய அனைத்து போட்டிகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டதது.

## குலசேகரம் மறைவட்டம்

### மறைவட்ட குருக்களுக்கான கூடுகை

குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகை 16.08.2022 அன்று மாத்தார் பங்கில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட புதிய பொறுப்பாளர் களை மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிறாங்கிளின் ஜோஸ் குருக்களோடு கலந்தாலோசித்து நியமித்தார். மறைவட்ட விவிலியம் மற்றும் நற்செய்தி சங்க இயக்குனராக அருட்தந்தை பிபின் அவர்களும், ஊடக பணிக்குழு இயக்குனராக அருட்தந்தை ஜாண் ஷிபு அவர்களும்,

இறையழைத்தல் ஊக்குனராக பேரருட்தந்தை S. வற்கீஸ் அவர்களும், மறைக்கல்வி இயக்குனராக அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

**புனித வின்சென்ட் தே பவுல் வட்டார சபைக் கூடுகை**



புனித வின்சென்ட் தே பவுல், குலசேகரம் வட்டார சபைக் கூட்டம் 14.08.2022 அன்று மாத்தார் பங்கில் வைத்து இயக்குனர் தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



**பொன்விழா கொண்டாட்டம்-புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், பேச்சிப்பாறை**

புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க தேவாலயம் 1972-ஆம் ஆண்டு ரம்பான் மோண்சிஞ்ஞோர் மேத்யூ வாழ்பிள்ளேத்து அவர்களால் தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கொண்டாடுகிறது. பொன்விழா கொண்டாட்டங்களின் சிறப்பு விருந்தினர்களாக மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை அவர்களும், ரம்பான் ஜோண்சி புத்தன்வீடு அவர்களும், மறைவட்ட குருக்களும், இறைமக்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.



## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் கூடுகையானது 08.08.2022 அன்று பீச்ரோடு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. குருக்கள் பங்கெடுத்து மறைவட்ட மற்றும் மறைமாவட்ட வளர்ச்சிக்காக பலவிதமான ஆலோசனைகளை பகிர்ந்து கொண்டனர்.



## பாலவிளை புனித சவேரியார் மலங்கரை கத்தோலிக்க புது ஆலய அர்ச்சிப்பு மற்றும் புது ஆயர்களுக்கு வரவேற்பு

















# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியானது இலவுவிளையில் சுமார் 12 வருடங்களாக பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் மிகவும் சீரும் சிறப்புமாக இயங்கி கொண்டிருக்கிறது. உலகத்தரம் மிக்க பொறியாளர்களை உருவாக்கும் பொருட்டு தரமான கல்வி, அறிவுடன் அறநெறி மதிப்பீடுகளுடன் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. சுமார் 1200 மாணவர்களும் 145 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் பணியாற்றி வருகின்றார்கள்.

***கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் BE பாடப்பிரிவுகள் பின்பருமாறு.***

BE - Mechanical Engineering

BE - Civil Engineering

BE - Electronics and Communication Engineering

BE - Computer Science and Engineering

***ME பாடப்பிரிவுகள்***

ME - Manufacturing Engineering

ME - Computer Science and Engineering

ME - Applied Electronics

***Ph.D பாடப்பிரிவு***

Ph.D - Computer Science and Engineering

புதிதாக Engineering பாடப்பிரிவில் B.Tech Artificial Engineering and Data Science என்ற பாடப்பிரிவும், MBA பாடப்பிரிவும் இந்த கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு சிறந்த கல்வி வழங்குவதோடு மட்டும் நின்று விடாமல் வேலை வாய்ப்பு உருவாக்கும் நோக்கத்தோடு கல்லூரி வளாகத்திலேயே கேமபஸ் கம்பெனி உருவாக்கப்பட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. கல்லூரி உருவாக்கப்பட்ட எட்டாவது ஆண்டிலேயே தேசியதர மதிப்பீட்டுக்குழுவால் (NAAC) ஆய்வு



செய்யப்பட்டு கல்லூரிக்கான சிறப்பு தர சான்றிதழ் பெற்றுக் கொண்டது மிகவும் சிறப்புக்குரியது.

தற்போது NBA தர சான்றிதழும், எம் கல்லூரிக்கு கிடைத்தது மிகவும் சிறப்புக்குரியது கல்லூரியை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியை காணிக்கையாக்குகின்றோம். மேலும் கல்லூரியின் வளாச்சிக்காக பாடுபடும் கல்லூரியின் தலைவர் மேதகு ஆயர் அவர்கள், முன்னின்று வழிநடத்தும் அருட்தந்தையர்கள், முதல்வர், இயக்குநர், உடன்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்கி கொள்கின்றேன்.

**பிரிவு உபசார விழா**

அருட்தந்தை அலெக்ஸ் குமார் - நிதிகாப்பாளர் அவர்களுக்கு பிரிவு உபசார விழா மற்றும் அருட்தந்தை ஹெபின் அவர்களுக்கு வரவெற்பு விழாவானது 07.07.2022 மாலை 4.30 மணிக்கு Mar Gregorios Block, Seminar Hall-ல் வைத்து உதவி பேராசிரியர் ஜாஸ்பின் அவர்களின் இறைவணக்க பாடலுடன் இனிதே ஆரம்பமாயிற்று, நம் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஜோஸ்பின் ராஜ் அவர்கள் தலைமை தாங்கி அருட்தந்தையர்களை வாழ்த்தி வரவேற்றார். முனைவர் V. சுரேஷ் HOD - ECE அவர்கள் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் A. லெனின் பிரெட் அவர்கள் முதல்வர் உரையாற்றினார். மார்த்தாண்டம் மறைமாவட்ட நிதிகாப்பாளர் அருட்தந்தை சதீஷ் குமார், கல்விசார் இயக்குநர் முனைவர் N.ஆஸ்டின், திருமதி மரிய சுதா ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். 4½ ஆண்டுகள் நம் கல்லூரியில் நிதிகாப்பாளராக செயல்பட்ட அருட்தந்தை அலெக்ஸ் குமார் அவர்களுக்கு கல்லூரி சார்பாக அன்பு பரிசு வழங்கப்பட்டது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மார் இவானியோஸ் சி.பி.எஸ்.இ பள்ளியின் இணை தாளாளர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் மற்றும் தலைமையாசிரியை அருட்சகோதரி ஆனீஸ் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் பங்குபெற்று சிறப்பித்தார்கள். உதவி பேராசிரியர் மனோ அவர்கள் இந்நிகழ்வை தொகுத்து வழங்கினார். நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் R.றோஸ்லின் சுகி நன்றியுரை கூற விழாவானது மாலை 5.30 மணிக்கு சிறப்பாக நிறைவுற்றது.

# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

## 2022–'23-ம் ஆண்டுக்கான வகுப்புகள் துவக்கம்

இளங்கலை இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டிற்கான வகுப்புகளானது 01.08.2022 அன்று ஜெபத்துடன் ஆரம்பமானது. கல்லூரியின் நிதி காப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் இறைவேண்டல் செய்தார்கள். கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவக்கவுரையாற்றினார்கள். முதல்வர் தம்பி தங்க குமரன் அவர்கள் தலைவர் உரையை நிகழ்த்தினார்கள்.




முதலாமாண்டு துவக்க விழா

கல்லூரியின் 25-வது ஆண்டுக்கான இளங்கலை முதலாமாண்டு மாணவிகளுக்கு வகுப்புகளானது 10.08.2022 அன்று துவங்கப்பட்டது. உறுப்பினர்களுக்கும் இடையே உரையாடல் நடத்தப்பட்டது.

## விழிப்புணர்வு பேரணி

தேசிய மாணவர் படை சார்பில் 'உள்ளூர் குரல்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணியானது நடத்தபட்டது. இப்பேரணியை கல்லூரியின் தாளாளர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பேரணியானது கல்லூரி வளாகத்திலிருந்து துவங்கி களியக்காவிளை பேருந்து நிலையத்தை சென்றடைந்தது.




விழிப்புணர்வு பேரணி

## சுதந்திர தின விழா

இந்தியா நாட்டின் 75-வது சுதந்திர தின விழா நிகழ்வுகள் தேசிய மாணவர்படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அமைப்பின் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது. கல்லூரியின் தாளாளர் அவர்கள் சுதந்திர தின வாழ்த்துக்களை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு தெரிவித்தார்கள். கல்லூரி முதல்வர் மற்றும் நிதிகாப்பாளர் அருட்தந்தை அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.



சுதந்திர தினவிழா



# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

## ஹோம்-சிறப்புக் குழந்தைகளுக்கு யூத் ரெட் கிராஸ் சங்கம் தேசிய கொடி மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல்

குழித்துறை ஹோம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியில் 12.08.2022 சனிக்கிழமை அன்று குழித்துறை ஸ்ரீதேவி குமாரி கலைக்கல்லூரியின் இளஞ்செஞ்சிலுவை சங்கத்தினரின் 75-வது சுதந்திர தினவிழா கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது. நிகழ்விற்கு ஹோம் சிறப்புப் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை இராபர்ட் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் விழா அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார். குழித்துறை ஸ்ரீதேவி குமாரி கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் M. உஷா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிற்புரை ஆற்றினார்கள். அவர்தம் உரையில் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்தார். சிறப்புக் குழந்தைகளாகிய உங்களுடன் இந்திய திருநாட்டின் 75 -வது சுதந்திரதினம் கொண்டாடுவது சாலச்சிறந்தது என்று குறிப்பிட்டார்.






அக்கல்லூரியின் மூத்த பேராசிரியரும், வணிகவியல் துறைத்தலைவருமான முனைவர் M. மகாலெட்சுமி அவர்களும் YRC Programe Officer முனைவர் சரிதா குமாரி அவர்களும், YRC Programe Officer முனைவர் பிந்து அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். யூத் ரெட் கிராஸ் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிந்துகுமாரி அவர்கள் இச்சங்கத்தின் செயல்பாடுகள்



# MARY MOUNT CBSE SCHOOL
## ANAKKARAI

Mary Mount CBSE School -ல் 75-வது சுதந்திர தினவிழா ஆகஸ்டு 12, 2022 அன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர் முதன்மை குரு மோண் ஜோஸ் பிரைட் அவர்கள் தேசியக் கொடி ஏற்றினார். அதனை தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட மழலையர் பள்ளி பூங்கா, கணினி மற்றும் மொழி ஆய்வகம், ஸ்மார்ட் போர்டு, வகுப்பறையை திறந்து வைத்தார்.



# St. Mary's CBSE School, Mariagiri

### சுதந்திர தினவிழா

13.08.2022 அன்று பள்ளி தாளாளர் அருட்தந்தை வினுகுமார் தேசிய கொடியை ஏற்றினார்கள். அதைத்தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.



### போதை ஒழிப்பு உறுதிமொழி

போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி 11.08.2022 அன்று நடைபெற்றது. பள்ளி தாளாளர், போதையின் சீர்கேடுகள் பற்றி கருத்துரை வழங்கினார். இறுதியில் பள்ளியின் மாணவர் தலைவர் ஜீலின் மோரீஸ் உறுதிமொழி வாசிக்க மாணவர்கள் அதை ஏற்று கூறினார்.



# பெதனி நவஜீவன் CBSE மேல்நிலைப்பள்ளி

### புனிதரின் பெயர்கொண்ட விழா கொண்டாட்டம்



கடந்த ஜூலை 25-ம் நாளை பெதனி நவஜீவன் பள்ளியின் தாளாளரும், CBSE மேல்நிலைப் பள்ளியின் முதல்வருமான அருட்தந்தை ஜாண் கிறிஸ்டோபர் OIC அவர்கள் புனிதர்களின் பெயர்கொண்ட விழாவை கொண்டாடினார். அவர்களுக்கு அன்று ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

### ரேஸ் 2 ஐ ஏ.எஸ் தேர்வில் முதலிடம்

2800 மாணவர்கள் பங்குபெற்ற இத்தேர்வில் பெதனி நவஜீவன் சி.பி.எஸ்.இ பள்ளி மாணவி முதலிடத்தை பெற்றது குருப்பிடதக்கது.



இத்தேர்வில் முதலிடம் மற்றும் வெற்றிப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு சுதந்திர தினவிழா சிறப்பு விருந்தினர் புதுக்கடை காவல் துணை ஆய்வாளர் திரு. ஜெயசேகரன் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள்.

### சுதந்திர தின விழா

75-வது சுதந்திரதின விழாவிற்கு சிறப்பு விருந்தினராக புதுக்கடை காவல் துணை ஆய்வாளர் திரு. ஜெயசேகரன் அவர்கள் வருகைத்தந்திருந்தார். அன்று கலைபோட்டிகளும், சுதந்திர தினவிழா சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# LITTLE FLOWER CENTRAL SCHOOL
## PUSHPAGIRI

St. Alphonsa feast was celebrated on 27 July 2022.

Hiroshima and Nagasaki day was observed and a short speech was given on 8 August 2022.

The Renovated kebi of mother mary was blessed by Fr. Ajeesh Kumar on12 August 2022 in the school campus.





75th Independence day was celebrated, the Chief Guest was Mother Lydia, the Mother General of the DM Congregation.

## LITTLE FLOWER MATRICULATION SCHOOL
### PUSHPAGIRI

Little Flower family celebrated the **Independence Day** with great joy. The chief guest was Rev. Mother Dr. Lydia DM, Superior General and Rev. Sr. Elizabeth Francis.

The **National Librarian Day** was celebrated by inaugurating the HINDU newspaper subscription and introducing the READING CORNER at each and every classroom. The 7th death anniversary of former President **Dr. APJ Abdul Kalam** was remembered. Our Principal, Vice Principal and all student captains gave floral tribute to the great Dr. APJ Abdul Kalam. Students performed group song and skit related to the importance of planting trees. We started a small vegetable garden with the coordination of students and teachers.






## CHRISTURAJA MATRICULATION SCHOOL
### MARTHANDAM

கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 2022 - 2023 -ம் கல்வி ஆண்டிற்கான "Extra Curricular Activities" வகுப்புகள் ஆரம்பமானது. இதில் கையெழுத்து, ஓவியம், நடனம் மற்றும் இசைப்பலகை, கிட்டார், மியூசிக்ஸ் போன்ற இசைக்கருவி பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் LKG மற்றும் UKG மாணவ மாணவிகளுக்கான "Flower Arrangement" போட்டி நடைபெற்றது. இதில் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். பின்னர் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கன்னியாகுமரி மாவட்டம் சார்பாக நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற்ற 75-வது சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தில் மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளியை சேர்ந்த 27 மாணவ மாணவிகளின் நடன நிகழ்ச்சி நிகழ்த்தினர்.

மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடந்த 75-வது சுதந்திரதினவிழா கொண்டாட்டத்தை முன்னாள் மாணவி, விற்பனை வரித்துறை துணை கமிஷணர் திருமதி அஜீஸா பிபின் தலைமையேற்று சிறப்பித்தார்.

படந்தாலுமூடு திருஇருதய மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடந்த ஜூனியர் செஞ்சிலுவை சங்க விழாவில், மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் குமரிமாவட்ட முதன்மை கல்வி அலுவலர், குழித்துறை கல்வி மாவட்ட அலுவலர் மற்றும் களியக்காவிளை காவல் ஆய்வாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டிக்கு முதல் பரிசும், கட்டுரை போட்டிக்கு இரண்டாம் பரிசும் கிடைத்ததோடு, இரண்டு மாணவிகள் சிறந்த ஜூனியர் களாக தேர்வு செய்யப்பட்டனர்.



# ஆயரின் ஆகஸ்ட் மாத நிகழ்வுகள்



2 ➢ மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினா.

5 ➢ பாலவிளை புனித சவேரியார் மலங்கரை கத்தோலிக்க புது ஆலய மூறோன் அர்ச்சிப்பு திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

6 ➢ பாலவிளை புனித சவேரியார் மலங்கரை கத்தோலிக்க புது ஆலயத்தில் முதல் நன்றி திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.



## இம்மாதம் நினைவு கூர

செப்டம்பர் 2022

1 – எட்டு நோன்பு ஆரம்பம்

2 – புனித சீமோன் தெஸ்தூனி

5 – புனித அன்னை தெரசா

8 – தூய இறையன்னையின் பிறப்புத் திருநாள் எட்டு நோன்பு நிறைவு

9 – புனித யோவாக்கீம், புனித அன்னம்மாள்

14 – சிலுவைத் திருநாள்

15 – தூய வியாகுல அன்னை

16 – புனித சிப்ரியான்

19 – புனித ஜனுவாரியூஸ்

20 – மலங்கரை கத்தோலிக்க மறுஒன்றிப்பு தினம்

21 – தோமஸ் மார் எவுசேபியஸ், கீவற்கீஸ் மார் மக்காரியோஸ், யூஹானோன் மார் தெயடோஷியஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு

23 – புனித பாத்ரெ பியோ

27 – புனித வின்செண்ட் தே பவுல்

28 – சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையின் நினைவு

29 – தலைமை வானதூதர்களான புனித மிக்கேல், புனித கபரியேல், புனித இரபேல்

30 – புனித ஜெறோம்

5


8


15


23


27



மேரி மக்கள்
துறவற சபை
நிறுவனர் மற்றும்
மார்த்தாண்டம்
மண்ணில்
மறைசெய்தியை
விதைத்தவர்
மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில்


மலங்கரை
கத்தோலிக்க
மறுஒன்றிப்பு
தினம்
செப்டம்பர்
20


புனித பாத்ரெ பியோ
புனித வின்செண்ட் தே பவுல்
செப்டம்பர் 23
செப்டம்பர் 27


செப்டம்பர்
14
சிலுவைத் திருநாள்